**தங்காலை பிரதேச சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 ஜுன் 11 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து தங்காலை பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த மற்றும் நன்கொடையாக கிடைத்திருந்த 11 சொத்துக்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 831,297 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டிற்கான நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் ஏற்பாடு செய்யும் போது ரூபா 1,860,515 தொகை மிகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | சரியான பெறுமதியை கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 500,000 தொகை கிரயத்தையுடைய காணி ஒன்று மற்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 120,000 தொகைக்கான குழாய் கிணறு என்பவற்றை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டின் போது உடைத்து அகற்றப்பட்டிருந்த பிரதேச சபையின் பழைய கட்டிடத்தின் கிரயம் ரூபா 73,975 தொகை குறைவாகக் கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. | சரியான பெறுமதியை கணக்கீடு செய்வேன். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | மீளாய்வாண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட வேண்டிய 03 வகையான செலவு விடயங்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 78,081 தொகைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செலவுகள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (vi) | மீளாய்வாண்டின் போது ரன்ன பொது கழிப்பறையை திருத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 343,782 தொகை சொத்து ஒன்றென மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (ஆ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கிய கணக்கு விடயம் ஒன்றுடன் தொடர்பாக ரூபா 1,203,150 தொகையான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 200,000 இற்கான சமமின்மைகள் காணப்பட்டது. | வித்தியாசங்கள் இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு கட்டணத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கீடு, தவறுதலாக செலவுக் கடன்கொடுத்தோர் அட்டவணையில் உட்படுத்தியிருக்கவில்லை. |

### (இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்காமையினால் கூட்டுத்தொகை ரூபா 495,898,697 தொகைக்கான 11 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமான மெய்மையாய்தல் செய்வதற்கு முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக் களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2019 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 134(1) | வீதவரி பெறுமதி மதிப்பீடு செய்து அறவீடு செய்வது தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | முன்னேற்றப்பட்ட கிராமப் பிரதேசதங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதுடன், ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக சபைக்கு சமர்ப்பித்த சந்தர்ப்பத்தில் பொதுக் கூட்டத்தில் எதிர்ப்பு ஒன்று காணப்பட்டமையால் வெளியிடப்பட்ட முன்னேறிய கிராமப் பிரதேசங்களுக்காக பொது கூட்டத்தின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. |
| (ஆ) 2008 பெப்ரவரி 01 திகதிய 1534/18 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானி | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் ஆகிய 03 வருடங்கள் மிகைத்துள்ள 43 தொழிற் சாலைகளுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் மீண்டும் வழங்கியிருக்கவில்லை. | அரசாங் வர்த்தமானி யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் மீண்டும் புதுப்பிப்பதற்காக கைத்தொழிலாளர்களுக்கு ஞாபகப்படுத்தியதுடன், அவர்களும் அதற்கு கவனம் செலுத்தியிருக் காததுடன், காலவதி யாகிய அனுமதிப்பத்தி |

| | | | |
|---|---|---|---|
| | | | ரங்களை உடைய கைத்தொழில்கள் அவை செயற்படாமல் காணப்பட்டால் அது பற்றி அறிவிக்கும் படி மற்றும் தற்போது அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிப்பதற்கு வேண்டிக் காணப்பட்டவைகள் தொடர்பில் அனுமதிப்பத்திரங்கள் வழங்கவும் நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்<br>----------------------------------- | | | |
| (i) நிதிப்பிரமாணம் 104(1) | 2013, 2016 மற்றும் மீளாய்வாண்டு சபையின் 4 வாகனங்கள் விபத்துக்கு உள்ளாகியிருந்ததுடன், அவற்றிற்கான ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாண ங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 3 வாகனங்கள் தொடர் பான ஆரம்ப விசாரணை 2019 மே மாதத்தில் ஆரம்பிப்பதில் உள்ளது. ஒரு வாகனத்தின் ஆரம்ப விசாரணை அறிக்கை குழுவினால் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 395(இ) | மீளாய்வாண்டிற்கான வங்கி நடைமுறைக் கணக்கு ஒன்றிற்கான மீளாய்வாண்டின் போது வங்கி இணக்கக் கூற்று தயாரித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாண ங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | தாமதத் தவறின் காரணமாக சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்ததுடன், அந்தக் கணக்கின் வங்கி இணக்கக் கூற்று 2019 மே 10 திகதி சமர்ப்பிக்கின்றேன். |
| (iii) நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டு 06 மாதங் கள் கடந்துள்ள ரூபா 31,911 தொகைக்கான 14 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | நிதிப் பிரமாண ங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அந்த காசோலைகளின் பெறுமதி 2019 மே மாதம் வருமானத்திற்கு எடுக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | (iv) நிதிப்பிரமாணம் 571 | இரண்டு வருடங்களை மிகைத்துள்ள ரூபா 1,185,243 தொகை பெறுமதியான 199 பலவின வைப்பு மீதிகள் மற்றும் 10 சதவீத பிடிப்பணம் 16 என்பவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | நிதிப் பிரமாண ங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 199 வைப்பு மீதிகள் மற்றும் 10% பிடிபண வைப்புக்கள் 16 தொகை 2019 ஆண்டின் போது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 | சபைக்குச் சொந்தமான 12 வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | செயற்படாத மீற்றர்கள் தொடர்பாக புதிதாக பொறுத்தப்படுவதுடன் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய வாகனங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (உ) | 2002 நவம்பர் 28 திகதிய IAI/2002/02 இலக்க திறைசேரி சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான கணினிகள் துணைக் கருவிகள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | குறிப்பிட்ட படிவத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று தயாரிப்பதற்காக உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கினேன். |
| (ஊ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 ஆம் திகதிய தபாப/ பபாகோ/2010/01 இலக்க சுற்றறிக் கையின் பந்தி 05 மற்றும் 06 | 8 கடைகளின் உடன் படிக்கைகள் மற்றும் பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி நாளதுவரை ஆக்கப்பட்டி ருக்கவில்லை. | சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | உடன்படிக்கைகளை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதுடன் பொதுக் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் எதிர்வரும் இரண்டு வருடங்களில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் கடைகளுக்கு சிட்டையிடல் பொறுத்தம் என பிரேரணை ஒன்று ஆமோதிக்கப்பட்டது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 25,642,295 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,770,464 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஏக்கர்வரி மற்றும் வர்த்தக வரி | 560,000 | 930,786 | 823,238 | 382,909 | 8,095,500 | 6,219,053 | 6,310,576 | 275,361 |
| வாடகை | 4,611,000 | 6,433,930 | 6,389,672 | 1,489,282 | 11,967,900 | 8,865,155 | 9,416,195 | 1,461,184 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 3,000,000 | 2,536,269 | 2,536,269 | - | 2,446,700 | 4,097,079 | 4,097,079 | - |
| ஏனைய வருமானங்கள் | 15,500,000 | 30,183,903 | 15,620,130 | 89,625,228 | 19,554,500 | 16,055,937 | 13,514,765 | 75,187,020 |
| மொத்தம் | 23,671,000 | 40,084,888 | 25,369,309 | 91,497,419 | 42,064,600 | 35,237,224 | 33,338,615 | 76,923,565 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானம் ரூபா 76,923,565 தொகையாக இருந்ததுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 40,084,888 தொகையாகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் ஆண்டின் போது அறவிடப்பட வேண்டிய ஒட்டு மொத்த வருமானம் ரூபா 117,008,453 தொகை எனினும் ஆண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 25,369,309 தொகையாகக் காணப்பட்டமையால், வருமானம் சேகரிக்கும் முன்னேற்றம் 22 சதவீதம் ஆக காணப்பட்டடது. வருட இறுதியில் உள்ளவாறு மேலும் அறவிடப்பட வேண்டிய மொத்த நிலுவை வருமானம் ரூபா 91,497,419 தொகையாக இருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | வருமானம் சேகரித்தலை அதிகரிப்பதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய ஏக்கர் வரி ரூபா 160,069 தொகையாகக் காணப்பட்டதுடன் நிலுவைகளை அறவீடு செய்வதற்காக பிரதேச சபை சட்டத்தின் 158(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை ஏக்கர்வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணிகள் விற்பனை செய்தல், துண்டுகளாக ஆக்குதல் மற்றும் பிழையாக சிட்டையிடல் ஆகிய காணரங்களினால் தேவையற்ற மீதியொன்று காட்டப்பட்டுள்ளதால் ஏக்கர் வரிப் பதிவேடு நாளது வரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 211 வர்த்தக அலகுகளில் இருந்து வியாபார வரி ரூபா 222,840 தொகை அறவீடு செய்வதற்கு பிரதேச சபைச் சட்டத்தில் (4)150 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | நிலுவை வியாபாரவரி அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையில் ரூபா 40,950 பதிவழிப்பதற்காக முதலமைச்சருக்கு அறிவிக்கப்பட்டிருந்த தற்போது மூடப்பட்டுள்ள கடைகள் தொடர்பாக ரூபா 21,410 இற்கான தேவையான விதப்புரைகள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. நிலுவைத் தொகையில் ரூபா 9,700 தொகை அறவிடப்பட்டுள்ள மற்றும் மீதித்தொகையை |

| | | |
|---|---|---|
| | | அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

**2.2.4 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 50 கடைகளில் இருந்து ரூபா 808,659 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் அந்த நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 159(1) பிரிவின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | 6 கடைகளுக்கு சீல் வைக்கப் பட்டுள்ளதுடன், அவற்றின் பெறுமதி ரூபா 370,370 தொகை ஆகும். 04 வாடகை களில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7,200 இனை பதிவழிப்பதற்காக முதலமைச் சருக்கு அனுப்பப்பட்டுள்ளது. மீதி நிலுவையில் ரூபா 128,440 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், மேலும் அறவிடப்பட வேண்டிய தொகைக்கான அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 07 வாராந்த சந்தைகளில் இருந்து சந்தை குத்தகை மற்றும் தாமதக் கட்டணமாக ரூபா 680,884 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | | ரூபா 232,388 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்த துடன் மீதித் தொகையை அறவீடு செய்வதற்காக வாடகையாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், சட்ட நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 1,564,302 தொகை மற்றும் ரூபா 88,060,926 தொகை பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களில் ரூபா 402,938 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன், மீதித் தொகையை அறவீடு செய்வதற்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் ஊடாக பிரதான செயலாளருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதி வரை சபையின் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெற்றிருக்கவில்லை. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்பட வேண்டும். | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக விண்ணப்பித்துள்ள துடன் சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகளை முறைப் பிரகாரம் சரி செய்து குறிப்பிட்ட சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | சபையின் அதிகாரப் பிரதேசத்தை சேர்ந்த குப்பைகள் சேகரிக்கப்படாத பிரதேசங்களில் சேகரமாகும் குப்பைகளை மீள்சுழற்சி செய்வதற்காக குப்பை முகாமைத்துவம் தொடர்பாக நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டு பொது மக்களின் அறிவினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தி பொது மக்களின் அறிவை அதிகரிக்க வேண்டும். | பல்வேறு முறைகளில் அவ்வப்போது பொது மக்களை அறிவுறுத்தி இருந்ததுடன் எதிர்காலத்தில் உக்காத பண்டங்களுக்கு வேறு ஒரு நாளில் மற்றும் நேரத்தில் பெற்றுக் கொள்ளல் மற்றும் குடாவெல்ல பிரதேசத்தில் அண்மித்த விஷேட நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | குப்பை நிலையத்திற்கு மிருகங்கள் வருவதை தடுப்பதற்காகவும் மற்றும் பொலிதீன் போன்ற பொருட்கள் சுற்றுச் சூழலில் பரப்பப்படுவதை தடுப்பதற்காக குப்பை நிலையத்தை சுற்றி வலைவேலி ஒன்று நிர்மாணித்திருக்கவில்லை. | குப்பை நிலையத்தை சுற்றி வலை வேலி போடப்பட வேண்டும். | வேலி போடுவதற்கு பாரிய அளவு பணம் தேவைப்படுவதினால் முன் பகுதியில் மாத்திரம் வலை வேலி நிர்மாணிக்கப்பட்டதுடன், எதிர்காலத்தில் பிரதேச சபையின் ஏற்பாடுகளை பயன்படுத்தி குறைபாடுகள் தீர்க்கப்படும். |

### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரழின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அறவீடு செய்வதற்கான சுட்டிகள் இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளக்க வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குவதற்கு 2019-2022 நான்கு வருடங்களில் செயற்படுத்துவதற்கு உத்தேச திட்டங்கள் நான்கு ஆண்டு திட்டத்தில் உட்படுத்தப்பட்டுள்ளது. |

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரையான காலப்பகுதியில் பிரதேச சபையின் நூலகத்தில் இருந்து அங்கத்தவர்கள் எடுத்துச் சென்றிருந்த 452 நூலகப் புத்தகங்கள் மீளாய்வாண்டு இறுதி வரை திருப்பி ஒப்படைத்திருக்க வில்லை. | நூலகப் புத்தகங்களை திருப்பி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நூலகத்தில் இருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டு மீண்டும் ஒப்படைக்க தாமதித்துள்ள புத்தகங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | சாத்தியக்கூறு ஆய்வு ஒன்று மேற்கொள்ளாமல் ரூபா 655,000 தொகை கிரயத்தையுடைய 02 முகாமைத்துவ தகவல் முறைமை கொள்வனவு செய்வதற்காக ரூபா 229,250 முற்பணத் தொகை ஒன்று 2016 ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த முறைமைகளின் செயற்பாடுகள் ஆரம்ப மட்டத்தில் காணப்பட்டதுடன், பொருத்தமான விதத்தில் அபிவிருத்தி செய்து கொள்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த முறைமை உச்ச செயற்பாட்டு மட்டத்தில் பேணப்பட வேண்டும். | இந்த முறைமையை நிறுவனத்திற்கு பொருத்தமான விதத்தில் நாளதுவரை ஆக்குவதற்காக கொள்வனவு செய்த நிறுவனத்திற்கு அறிவித்ததுடன் குறிப்பிட்ட நிறுவனத்தில் இருந்து வந்து அதன் செயற்பாடுகள் தொடர்பாக அறிவூட்டப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபையில் மீளாய்வாண்டு மார்ச் 28 ஆம் திகதி சேகரிக்கப்பட்டிருந்த தொகையில் ரூபா 32,070 தொகை மற்றும் அக்தோபர் 30 ஆம் திகதி சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 15,260 தொகை சபையின் நடைமுறை வங்கி கணக்கில் வைப்புச் செய்யாமல் தனிப்பட்ட 02 கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | சரியான வங்கி கணக்குகளில் பண வைப்புச் செய்யப்பட வேண்டும். | தவறுதலாக தனிப்பட்ட கணக்கு ஒன்றில் செலவு வைக்கப்பட்ட ரூபா 32,070 இற்கான தொகை குறிப்பிட்ட நபரிடம் அறவிடப்பட்டு 2019 மார்ச் 29 ஆம் திகதி பொதுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டதுடன் ரூபா 15,260 இற்கான தொகை 2019 ஏப்ரல் 10 திகதி பொதுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டது. |
| (ஈ) | பி.ச.02 படிவத்தின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 06 திகதி சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 82,678 தொகை ஒரு மாத காலம் கையில் தடுத்து வைத்திருந்து 2019 ஜனவரி 03 திகதி வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | தாமதமின்றி பணத்தை வங்கியில் இடப்பட வேண்டும். | தவறுதலாக நடைபெற்றுள்ள துடன் அவ்வாறு எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (உ) | சபைக்குச் சொந்தமான நான்கு வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த விபத்துக்கள் தொடர்பாக பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத் தர்களை இனங்கண்டு நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு பணத்தை பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர் களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நட்டம் தொடர்பாக பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்கள் யார் என ஆரம்ப விசாரணை மேற்கொண்டு அதன் பிரகாரம் அவர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப் பட்ட 13 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 பெப்ரவரி 01 திகதி 06 வெற்றிடங்கள் மற்றும் 2019 மார்ச் 21 திகதி ஒரு வெற்றிடம் நிரப்பப்பட்டுள்ள துடன் மீதியை எதிர்காலத்தில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | சபையின் 13 ஊழியர்கள் அனுமதிக்கப்பட்ட கடமைகளுக்கு புறம்பான கடமைகளில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். | அங்கீகரிக்கப்பட்ட கடமைகளில் ஈடுபடுத்த வேண்டும். | போதியளவு சாரதிகள் இன்மையினால் வேறு பதவிகளில் கடமை புரியும் ஊழியர்கள் நாளாந்த கடமை கள் ஈடுபடுத்தப்படுவதுடன் வெற்றிடங்கள் நிரப்புவதற்காக வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | நடவடிக்கை எடுத்துள்ளேன். சுகவீன நிலையில் பரிகாரம் செய்யும் ஊழியர்கள் சிறிய கடமைகளுக்காக அலுவலக த்திற்கு இணைக்கப்பட்டனர். |
| (இ) | உத்தியோகத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய இடர் மற்றும் விழா முற்பண மீதிகள் முறையே ரூபா 94,200 தொகை மற்றும் ரூபா 1,250 தொகை 2015 ஆண்டு முதல் அறவிடப்பட்டிருக்க வில்லை. | பதவியணி கடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சேவையை விட்டுச் சென்று ள்ள உத்தியோகத்தரின் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு கடிதம் அனுப்பிய போதிலும் பதில் ஒன்று கிடைக்க வில்லை. கடனை அறவீடு செய்வதற்கு இணக்க சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.4 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய கைத்தொழில்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற வேண்டிய கைத்தொழில்கள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய கைத்தொழில்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ள ப்பட்டுள்ள அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | நிர்மாணவேலைகள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று விரைவாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை சபையினால் அனுபவிக்கப்படும் 38 காணிகள், 09 கட்டிடங்கள் மற்றும் சபைக்கு சொந்தமான 05 வாகங்களின் சட்ட ரீதியான உரிமையை சபைக்கு உரித்தாக்கியிருக்கவில்லை. | சொத்துக்களை உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையினால் அனுபவிக்கப்படும் காணிகள், அபிவிருத்தி சபை காலத்தில் நன்கொடையாக கிடைத்தவை ஆக இருந்ததுடன் அவற்றிற்கான காணி உறுதிகள் மற்றும் ஆவணங்கள் கிளர்ச்சிக் |

| | | |
|---|---|---|
| | | காலத்தில் அலுவலகம் தீ வைக்கப்பட்ட போது அழிந்துள்ளது. 8 காணிகள் தொடர்பான காணி உறுதிகள் சபையில் காணப்படுகின்றது. ஏனைய காணிகளை உரித்தாக்குவதற்காக உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளரின் கோரிக்கை பிரதேச செயலாளருக்கு தொடர்புபடுத்தி இந்த சிக்கல் தொடர்பாக ஆளுனரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. வாகனங்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5.2 விளைவற்ற/ குறைபயன்பாட்டு சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான டபள் கப் வண்டி மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் கிடைத்திருந்த கப் வண்டி முறையே 2011 மற்றும் 1996 ஆண்டுகள் முதல் விளைவற்றுக் காணப்பட்டதுடன், அவற்றை அப்புறப்படுத்துவதற்காக அல்லது திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விளைவற்றுக் காணப்படும் சொத்துக்களை திருத்தி பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 5718-53 இலக்க கப் வண்டி எதிர்காலத்தில் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் 6507-252 இலக்கங் கொண்ட கப் வண்டி சபைக்கு உரித்தாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 வருமான விடயங்களின் பிரதி கூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 77,897,107 தொகையாக இருந்ததுடன், அவை 29 சதவீதம் முதல் 89 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | வாகனங்களின் திருத்த வேலைகளின் காரணமாக பல மாத காலமாக எதிர்பார்த்த வருமானம் கிடைக்கப் பெறாமை மற்றும் மத்திய அரசில் இருந்து மாகாண சபையில் இருந்து எதிர்பார்த்த மூலதன உதவி கிடைக்கப்பெறாமை முரண்களுக்கு காரணமாகும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 04 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 60,657,903 தொகையான சேமிப்புக் காணப்பட்ட துடன், அவை 21 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | மந்திரிமார் கொடுப்பனவு, புகையிரத அனுமதிப் பத்திரக் கட்டணம் ஒதுக்குதல் மற்றும் மூலதன செலவுகளின் சேமிப்பு காணப்படல் இதற்கு காரணமாக இருந்தது. |
| (இ) | செலவு விடயம் ஒன்றின் பிரதிகூலமான முரண்கள் ரூபா 2,096,494 தொகையாக காணப்பட்டதுடன், அவை 27 சதவீதமாகும். | நடைமுறை சாத்தியமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | வழங்கல்கள் மற்றும் உபகரணங் களுக்காக செலவுகள் அதிகரித்தல் இதற்கான காரணமாகும். |